மாண்புமிகு திரு மு. கருணாநிதி : மாநில அரசை அவர்கள் கலந்துகொள்ளவில்லை. அப்போதே மாநில அரசு அதற்காகத் தன்னுடைய வருத்தத்தைத் தெரிவித்தது.

திரு. என். எஸ். வி. சித்தன் : அப்படியானால் அப்போது மாநில அரசு ஊழியர்கள் அனுப்பப்படவில்லையா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அப்போது நடைபெற்ற கிளர்ச்சியின் போது மாநில அரசின் சார்பாகப் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டது. பாதுகாப்புக்கான எல்லா வகையான ஏற்பாடுகளும் மாநில அரசின் சார்பாக செய்யப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : 1968 செப்டம்பர் திங்கள் 19-ம் தேதி வேலை நிறுத்தத்தின் காரணமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருக்கும் மத்திய அரசு ஊழியர்களை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள நம்முடைய தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு மு. கருணாநிதி : அது பற்றி மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறது.

மதுராந்தகம் வட்டத்தில் நிலமில்லா விவசாயிகள்

*169 வினா : **திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) மதுராந்தகம் வட்டத்தில் 1965, 1966, 1967-ம் ஆண்டுகளில் முறையே நிலமில்லாத எத்தனை விவசாயிகளுக்குப் பட்டா வழங்கப் பட்டுள்ளது ?

(இ) பட்டா வழங்கியதில் தவறுகள் ஏற்பட்டிருப்பது குறித்து அரசினருக்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் :

(அ) 1965—37 பட்டாக்கள்.
1966—31 பட்டாக்கள்.
1967—636 பட்டாக்கள்.

(இ) எந்தவிதமான புகாரும் அரசுக்கு வரவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1965-ல் 37 பட்டாக்களும், 1966-ல் 31 பட்டாக்களும் கொடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். 1965–66-ல் வழங்கப்பட்ட பட்டாக்களில் நிலம் உள்ளவர்களுக்கும் வழங்கப் பட்டிருப்பதாகவும், அதன்பேரில் இன்னும் சில நிலங்களை அதிகாரிகளே பட்டா செய்து கொண்டு கடனும் வாங்கப்பட்டிருப்பதாகவும், நிலம் இல்லாத ஏழை விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருப்பதாவும் புகார்கள் வந்திருக்கின்றனவா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் பட்டது ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் கேள்வியைத் தெளிவாகக் கேட்டிருக்கவேண்டும். 1965–66 ஆண்டு விவகாரம் முந்திய அரசாங்கத்தைப் பொறுத்தது. அப்போது ஏதேனும் தவறுகள் நடந்திருக்குமானால் அதற்குப் பரிகாரம் தேட வாய்ப்பு இருக்கிறது. புதிய அரசு வந்த பிறகு 1967-ம் வருஷத்தில் 636 பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 1965-ல் 37 பட்டாக்களும், 1966-ம் ஆண்டில் 31 பட்டாக்களுமே வழங்கிய நிலை அது அப்போது சிராக நடைபெறவில்லை என்பதைத்தான் காட்டுகிறது. புகாரைப் பொறுத்தவரையில் என்ன புகார் வந்தாலும் நியாயமான புகாராக இருக்குமானால், நிச்சயமாக அரசாங்கம் அதற்கான பரிகாரத்தைத் தேடித் தரும்.

திரு. கா. வேழவேந்தன் : முன்பு இருந்த நிலை மாறி புதிய அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு மூன்று அம்சத் திட்டம் என்று சொல்கிற

பட்டு மாவட்டத்தில் கொண்டு வரப்பட்டு மதுராந்தகம் போன்ற பல்வேறு வட்டங்களில் அதிகமான அளவுக்குப் பட்டா வழங்கும் செயல்கள் நடைபெற்றுள்ளன. அறிஞர் அண்ணா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த மூன்று அம்சத் திட்டம் மற்ற மாவட்டங்களிலும் அமுல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிக்க உறுப்பினர் அவர்களுடைய கேள்விக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் பட்டா வழங்குவதற்காக மூன்று அம்சத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டம் ஒரு பைலட் திட்டமாகக் கொண்டு வரப்பட்டது. இந்தத் திட்டம் இல்லாமலே கூட கடந்த ஆண்டு 22,000 ஏக்கர்களுக்குப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 50,000 ஏக்கர் நிலங்கள் ஏழை விவசாயிகளுக்கும், வீட்டு மனைக்கும் வழங்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் துரிதமாக, விரைவாக வேலைகள் நடைபெற்று வருகின்றன.

திரு. முனு. ஆதி: சென்னை நகரத்திலிருந்து 20 மைல் சுற்றளவுக்குள் பட்டா வழங்கக்கூடாது என்ற சட்டம் இருக்கிறது. ஆனால் அதே சமயத்தில் குடிசைகளுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்பது கொள்கையாக இருக்கிறது. இந்த இடர்பாடுகளைத் தவிர்த்து ஏழை குடிசைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் சென்னை நகரைச் சுற்றி 20 மைல் சுற்றளவில் தாம்பரம், பல்லாவரம், வில்லிவாக்கம், திருவொற்றியூர், ஆவடி போன்ற பகுதிகளில் பட்டா கொடுக்க முடியாது. ஆனால் அரசாங்கம் அந்தப் பகுதிகளில் கணக்கெடுத்ததில் 50,000 குடிசைவாழ் மக்கள் அங்கே குடியிருந்துகொண்டு பட்டா கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. பழைய காலத்தில் எழுதிய போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரைப் பார்த்தால் 750 சதுர அடிக்கு மேல் கொடுக்கக்கூடாது என்று இருக்கிறது. ஆனால் ஒவ்வொருவரும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கக்கூடிய இடம் 4 சென்ட், 6 சென்ட், 7 சென்ட் என்று இருக்கிறது. சமுதாய காரணங்களுக்காக அவர்கள் எல்லோரையும் அப்புறப்படுத்தவும் முடியவில்லை. அவர்கள் எல்லாம் பட்டா கேட்டால் அதைக் கொடுப்பது சட்டத்திற்கு விரோதமாக இருக்கிறது என்று அதிகாரிகள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், போர்டு மெம்பர்கள் கூறுகிறார்கள். போர்டு ஸ்டாண்டிங் ஆர்டரை எந்த அளவுக்குத் திருத்த வேண்டுமோ அந்த அளவுக்குத் திருத்தி ஆட்சேபனை இல்லாத பகுதிகளில், அன்-அப்ஜக்ஷனபிள் என்க்ரோச்மெண்ட் முழுவதையும், ஏறக்குறைய 40,000 பேருக்கு அந்தப் பகுதிகளில் பட்டா வழங்குவதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. எவ்வளவு விரைவாக அதை நடத்த வேண்டுமோ அதற்கான காரியங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Patta holders in Tamil Nadu

* 170 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the number of patta holders in Tamil Nadu who own below one acre ; and

(*b*) the number of patta holders in Tamil Nadu who own below five acres?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : (அ) 31,68,850 பட்டாக்கள். (இ) 34,80,417 பட்டாக்கள்.

DR. H. V. HANDE : Has the Ministry got any programme to waive procurement from patta holders owning below five acres?